**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.499/2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : Sureshkumar |
| Father/Husband's Name | : Jayaram |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.02.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது செங்கல்பட்டு தாலுக்கா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.04.2023ம் தேதி பகல் ரோந்து பணியாக நானும், உதவி ஆய்வாளர் செல்வம், தங்கராஜ் தலைமை காவலர் ஆகியோர்களுடன் ரோந்து பணியாக மதுவிலக்கு மற்றும் கஞ்சா வேட்டையாக பாலூர், வில்லிபாக்கம், திம்மாவரம் ஆகிய இடங்களில் கண்காணித்து சென்று போது, மேற்சொன்ன உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், மாலை 17.00 மணியளவில் சோதனைக்கான உபகரணங்களை எடுத்து கொண்டு, ஒழலூர் குளக்கரை அருகே கண்காணித்த போது, ஒரு ஆண் நபர் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை என்னை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து விசாரித்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறியவரை பின்னர் தன் பெயர் தினேஷ்குமார் த.பெ.தெய்வசிகாமணி என்றும், அம்பேத்கார் நகர், ஒழலூர் கிராமத்தில் வசிப்பதாகவும் கூறியவரை தற்போது நீதிமன்ற ஆஜரில் இருக்கும் எதிரியை பிடித்து விசாரணை செய்தோம். பின்னர், மேற்படி, ஆஜர் எதிரியிடம் உதவி ஆய்வாளர் உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின்

பேரில், உதவி ஆய்வாளர் எதிரி தினேஷ்குமார் என்பவரை சோதனை செய்த போது, அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் பேக்கில் வைத்திருந்த எடை போட்டு பார்த்தபோது, 100 கிராம் அளவு கொண்ட (2 - 50 கிராம் பாக்கெட்) கஞ்சாவை பச்சை நிறத்தில் ஒருவித நெடியுடன் கூடிய துர்வாசத்தில் இருந்ததை குறித்து கேட்டபோது, அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்போது உதவி ஆய்வாளர் உரிய காரணம் கூறி, ஆஜர் எதிரியை கைது செய்தபோது, எதிரி தான் வைத்திருந்த 100 கிராம் அளவு கொண்ட 2 பாக்கெட்டுகளை உதவி ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கொடுக்க, அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதற்கு நானும், தலைமை காவலர் தங்கராஜ் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். எனது கையெழுத்துடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து, எதிரியின் மீது NDPS சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

நான் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல்நிலையத்தில் எவ்வளவு வருடங்களாக பணியாற்றி வருகிறேன் என்றால் ஒரு ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். தற்போதும் அங்கு தான் வேலை செய்கிறேனா என்றால் இல்லை. அந்த காவல்நிலையத்தில் சுற்றியுள்ள எல்லா திசையும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும், காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 20 கி.மீ தூரம் இருக்கும். காவல்நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கும் எவ்வளவு நேரத்தில் சென்றோம் என்றால் சுமார் அரை மணி நேரத்தில் சென்றோம். யாருடைய உத்தரவின் பேரில் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் காவல் உதவி ஆய்வாளர் உத்தரவின் பேரில் நான் சம்பவ இடம் சென்றேன். காவல் உதவி ஆய்வாளரின் பெயர் தெரியுமா என்றால் செல்வம். சம்பவ இடத்திற்கு எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் 3 நபர்கள் சென்றோம். நான் சம்பவ இடம் சென்றதை பொது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேனா என்றால் பதிவு செய்துள்ளேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிரியை எந்த இடத்தில் வைத்து கைது செய்தேன் என்றால் குளக்கரையில் வைத்து கைது செய்தோம். அங்கு ஆள்நடமாட்டம் நிறைய உள்ளதா என்றால் இல்லை.

எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களின் புகைப்படமோ அல்லது வீடியோ எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரியை கைது செய்தபோது, பொது அதிகாரியிடம் கையொப்பம் பெற்றோமா என்றால் எதிரி வேண்டாம் என்று சொல்லிவிட்டார். எதிரி வைத்திருந்த பொருள் கஞ்சா என்பது எவ்வாறு தெரியும் என்றால் முகர்ந்து பார்த்தபோது கஞ்சா என்று தெரிய வந்தது. அது சோதனைக்கு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தாக்கல் செய்யப்பட்டது. நாங்கள் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில், எதிரியின் மீது தவறான வழக்கு பதிவு செய்துள்ளார் என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.